**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2021**
**C031 தமிழகப் பண்பாட்டு வரலாறு**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. 'குறியீடு' பண்பாட்டுக் கூறாகக் கருதப்படுகிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு தருக.
2. தமிழ் நாட்டின் பழைய வடக்கு எல்லை எது?
3. 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே' –எனப் பாடியவர் யார்?
4. தாழிகளைத் தமிழர் எதற்குப் பயன்படுத்தினர்?
5. கலித்தொகைப் பாடலில் தண்ணீர் கொடுத்த தலைவி, தலைவனைப் பற்றித் தாயிடம் என்ன கூறினாள்?
6. உலகம் எங்கும் வாழும் கலைகள் யாவை?
7. கண்ணகி யாரிடம் அடைக்கலம் ஆக்கப்படுகிறாள்?
8. காயசண்டிகை யார்?
9. கல்வெட்டின் பகுதிகளில் எவையேனும் இரண்டு செய்திகளைக் குறிப்பிடுக.
10. முதற்கற்கோயிலைக் கட்டிய பல்லவ மன்னன் யார்?
11. சாவடி என்ற சொல் யார் காலத்தில் ஏற்பட்டது?
12. சுங்கம் தவிர்த்த சோழன் என்று அழைக்கப்படுபவன் யார்?
13. சிற்றூர்ப் பண்பாட்டைக் காப்பாற்றி வருபவர் யார்?
14. நகரப் பண்பாட்டிற்கு இரு அடையாளங்களை எழுதுக.
15. அஃறிணை உயிர்களிடம் காட்டும் அன்புக்கு இரு சான்று தருக.

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. தமிழர் பண்பாட்டில் அடிப்படையாக அமைந்துள்ளவற்றை எழுதுக.
2. உறையூர்–குறிப்பு வரைக.
3. ஐம்பெரும் காப்பியங்களின் காலத்தைக் குறிப்பிடுக.
4. இராமானுஜர் தவறு செய்து விட்டதாகத் திருக்கோஷ்டியூர் நம்பி கூறியபோது இராமானுஜர் கூறிய பதில் யாது?
5. அம்பிகாபதியின் கதையைக் சுருக்கமாகக் கூறுக .
6. கிறித்தவர்களின் பண்பாடு தமிழரிடையே உண்டாக்கிய புதுமைகளை எழுதுக.
7. மங்கம்மாள் பெற்ற வெற்றிகள் யாவை?
8. சிதைந்த நிலையிலுள்ள அரண்மனைகள் இன்று எங்கு காணப்படுகின்றன.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) பண்பாட்டின் வகைகள் பற்றி சமூகவியல் அறிஞர்கள் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தமிழ்ப் பண்பாட்டையும் வரலாற்றையும் காட்டும் மூலச்சான்றுகளாக இலக்கியங்களும் கல்வெட்டுகளும் விளங்குகின்றன என்பதைச் சான்றுடன் விளக்குக.

2. (அ) சைவ வைணவச் சமயங்கள் வளர்த்த தமிழர் பண்பாட்டைப் புலப்படுத்துக

(அல்லது)

(ஆ) காப்பியங்கள் காட்டும் தமிழர் பண்பாட்டை நிறுவுக.

3. (அ) நிகழ்காலப் பண்பாட்டு வளர்ச்சியில் இடர்ப்பாடுகளைக் கூறி கிராமங்கள் தமிழ்ப்பண்பாட்டின் நிலைக்களன்களாகத் திகழ்கின்றன என்பதை ஆராய்க.

(அல்லது)

(ஆ) காசும் கல்வெட்டும் காட்டும் பண்பாட்டின் தன்மைகளை விவரிக்க.

❋ ❋ ❋